# சனாதிபதி நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சனாதிபதி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கிடைக்கவேண்டிய கடன்பட்டோர்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 1991 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 250,000,000 தொகையான கடன் பணத்தில் மேலும் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 195,000,000 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த வட்டி ரூபா 257,406,164 ஆகும். 2008 ஆம் ஆண்டின் பின்னர் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் இக் கடன் பணத்தை அல்லது வட்டிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நிதியம் தவறியிருந்தது. 2013 பெப்ரவரி 28 ஆந் திகதிய 3/1/1/42 ஆம் இலக்க நிர்மாணம், பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் மூலம் இக்கடனைத் தீர்ப்பதற்காக திறைசேரியிடமிருந்து நிதியேற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் கடன் பணத்தை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சனாதிபதி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏலவிற்பனை கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 3,000,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சென்னை இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான மீதி

ரூபா 2,910,001 ஆனமையால் ரூபா 89,999 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியச் செயற்பாட்டிலிருந்து ரூபா 149,685,390 தொகையான மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 124,012,145 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவில் ரூபா 25,673,245 தொகையான அதிகரிப்பிற்காக வட்டி வருமானம், அபிவிருத்தி லொத்தர் சபையிடம் இருந்து பெறுவனவு அதிகரித்தமை, சமய நடவடிக்கைகள் மற்றும் விசேட செயற்திட்டத்திற்கான செலவினங்கள் குறைவடைந்தமை போன்ற காரணங்கள் விசேடமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைத்த ரூபா 1.65 பில்லியன் தொகை மொத்த வருமானத்தில் 88.45 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 1.38 பில்லியனுடன் இணக்கஞ் செய்தபோது ரூபா 0.27 பில்லியன் அதாவது 19.79 சதவீத அதிகரிப்பாகும். நிதியத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1.52 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1.71 பில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டின் நிதியத்தின் முதலீடு ரூபா 1.09 பில்லியனானமையால் மீளாய்வாண்டின் போது அது ரூபா 1.20 பில்லியன் வரையான 10.09 சதவீத அதிகரிப்பைக் கைப்பற்ற முடிந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக ஆண்டின் இறுதியில் காசு மீதி 319 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. நிதியத்தில் செலவினங்களைச் செய்யும் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக கலாசார அலுவல்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்காக செய்யப்பட்ட செலவினங்கள் முறையே 486 சதவீதம் மற்றும் 410 சதவீதமான அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்த போதிலும் வைத்திய உதவிகளுக்காகச் செய்யப்பட்ட செலவினத்தின் அதிகரிப்பு 5 சதவீதமான ஆகக் குறைந்த நிலையில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் வைத்திய உதவிக் கொடுப்பனவு, கலாசார நடவடிக்கைகள், மதச் செயற்பாடுகள், நலன்புரி நடவடிக்கைகள், கல்விச் செயற்பாடுகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் விசேட செயற்திட்டங்கள் என்பவைகளுக்காக ரூபா 979.74 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம்மொத்தச் செலவில் வைத்திய உதவிக்காக ரூபா 857.64 மில்லியன் அதாவது நூற்றுக்கு 87.53 சதவீதம் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு புலமைப்பரிசிலுக்காக ரூபா 102.45 மில்லியன் அதாவது மொத்தச் செலவில் நூற்றுக்கு 10.45 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மற்றைய நோக்கங்களை அடைவதற்காக மொத்தச் செலவில் நூற்றுக்கு 2.02 சதவீதம் அதாவது ரூபா 19.64 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டில் வைத்திய உதவியாக 4181 இருதய சத்திர சிகிச்சை நோயாளிகளுக்கு ரூபா 569.40 மில்லியன் தொகையும், 699 புற்றுநோய் சிகிச்சைகளுக்காக 79.61 மில்லியன் தொகையும், 573 சிறுநீரக மாற்றீடுகளுக்காக 67.19 மில்லியன் தொகையும், 756 ஏனைய சிகிச்சைகளுக்காக 141.58 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் போது 6265 நோயாளிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 815.81 மில்லியன் தொகையுடன் ஒப்பிட்டபோது 56 நோயாளிகள் குறைவடைந்திருந்த போதிலும் செலவினம் ரூபா 41.83 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

க.பொ.த (உயர் தரம்) இல் உள்ள 16,495 மாணவர்களுக்கான புலமைப்பரிசிலுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 98.97 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 3.23 மில்லியன் 02 வெளிநாட்டுப் புலமைப்பரிசிலுக்காக செலவிடப்பட்டிருந்தன.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உரிய கால எல்லையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட உரித்தற்ற கணிசமான புலமைப்பரிசில்கள் நிதியத்தினால் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு காணப்பட்டது.

| கோவை இலக்கம் | மாகாணம் | பணம் செலுத்திய திகதி | எஞ்சிய பணம் ரூபா | மீள அனுப்பிய திகதி | எடுக்கப்பட்ட காலம் (மாதம்) |
|---|---|---|---|---|---|
| Pf/school/74527 | கிழக்கு | 2012.07.20 | 78,000 | 2012.12.19 | 05 |
| Pf/school/74522 | வட மேல் | 2012.07.23 | 96,000 | 2012.11.20 | 04 |
| Pf/school/71607 | கிழக்கு முதலாம் வருடம் | 2011.11.30 | 72,000 | 2012.03.22 | 04 |
| Pf/school/71605 | வட மத்திய முதலாம் வருடம் | 2011.11.30 | 222,000 | 2012.03.28 | 04 |
| Pf/school/71599 | மேல் முதலாம் வருடம் | 2011.11.30 | 24,000 | 2012.04.10 | 04 |
| | இரண்டாம் வருடம் | 2012.04.17 | 18,000 | 2012.10.19 | 05 |
| Pf/school/71600 | தெற்கு முதலாம் வருடம் | 2011.11.30 | 96,000 | 2012.04.23 | 04 |
| Pf/school/71603 | வட மேல் இரண்டாம் வருடம் | 2012.03.12 | 42,000 | 2012.07.17 | 03 |
| Pf/school/71604 | சப்ரகமுவ முதலாம் வருடம் | 2011.11.30 | 396,000 | 2012.02.29 | 03 |
| | இரண்டாம் வருடம் | 2012.03.12 | 24,000 | 2012.06.15 | 02 |
| Pf/school/71602 | ஊவா இரண்டாம் வருடம் | 2012.03.12 | 114,000 | 2012.07.05 | 04 |

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினங்களை ஒப்பீடு செய்த போது 8 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் ஏற்பட்டமையினால் வருடாந்த பாதீடு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது நிதியச் செயலாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதியப் பயன்பாடு
(ஆ) பெறவேண்டிய பணம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

**பின்னிணைப்பு – 01**

**வருமான, செலவினக் கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் வருமான, செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான | | | |
|---|---|---|---|---|
| | **2012** | | **2011** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| **வருமானம்** | | | | |
| பங்களிப்புப் பெறுவனவு | 59,758,878 | | 157,706,127 | |
| வட்டி வருமானம் | 155,469,134 | | 112,754,911 | |
| அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான பெறுவனவு | 1,648,471,001 | 1,863,699,013 | 1,376,035,051 | 1,646,496,089 |
| **செலவினம்** | | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 150,000 | | 140,000 | |
| காகிதாதிகள் | - | | 17,625 | |
| மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 857,641,805 | | 815,814,246 | |
| கலாசார அலுவல்கள் | 7,385,000 | | 1,260,000 | |
| சமய நடவடிக்கைகள் | 650,000 | | 3,150,000 | |
| நலன்புரி நடவடிக்கைகள் | 611,750 | | 968,500 | |
| கல்வி நடவடிக்கைகள் | 10,200,000 | | 2,000,000 | |
| புலமைப் பரிசில் முறைமையின் செலவினம் | 102,447,038 | | 96,266,988 | |
| மஹாபொல உயர் கல்விப் | | | 600,866,585 | |

| | | | | |
|---|---|---|---|---|
| புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 734,128,030 | | | |
| விசேட செயற்திட்டம் | 800,000 | 1,714,013,623 | 2,000,000 | 1,522,483,944 |
| | -------------- | ----------------- | -------------- | ---------------- |
| செலவினத்திற்கு மேலான வருமான மிகை | | 149,685,390 | | 124,012,145 |
| | | ========== | | ========= |

**பின்னிணைப்பு –02**

**நிதியத்திற்குரிய நிதி முதலீடு தொடர்பான கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதி முதலீடு தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| **முதலீட்டு வகை** | **2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **2012 ஆண்டின் போதான முதலீடு** | **2012 ஆம் ஆண்டின் போதான மீளல்கள்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு | 730,888,100 | 89,716,900 | 20,000 | 820,585,000 |
| மக்கள் வங்கியில் நிலையான வைப்பு | - | 15,000,000 | - | 15,000,000 |
| இலங்கை வங்கியில் நிலையான வைப்பு | - | 45,000 | - | 45,000 |
| அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | - | - | 2,200,000 |
| திறைசேரி நிர்வாகக் கடன் | 363,375,000 | - | - | 363,375,000 |
| | ----------------- | ----------------- | ----------------- | ----------------- |
| மொத்தம் | 1,096,463,100 | 104,761,900 | 20,000 | 1,201,205,000 |
| | ========== | ========== | ========== | ========== |